# செந்தமிழ்

| | | |
|---|---|---|
| தொகுதி சுக<br>Vol. 61 | திருவள்ளுவர் ஆண்டு 1996<br>October 1965 | பகுதி டு<br>No. 5 |


## "காலத்தில் பண்புடைமை"


வித்துவான்.
மு. செகந்நாதன்,
தமிழாசிரியர்,
பேரூர், கோவை.


இன்றையசமுதாய நல்வாழ்வின் தொடக்கம்எதனில் என்ற வினவிற்கு விடை கூற முற்படுவது அரிதாகின்றது. காரணம் காலமாறுபாட்டில் முன்னுக்குப்பின் முரண்பட்டு வந்துகொண்டிருப்பதை இலக்கியங்கள் இயம்பிக்கொண்டு செல்கின்றன. காவியங்கள் அதற்கான கருத்துக்களைக் கொடுக்கின்றன; புலவர்களின் புலமைகள் அதன் வழியில் பூத்துவருகின்றன என்பதனையே ஒரு சில சான்றுகொண்டு இச்கட்டுரை நிறைவுபடுத்தும்

மனித வாழ்க்கையில் மனிதனின் மனநிலை எவ்வாறு அமைகிறதோ, அதற்கேற்பவே அவர்களுக்கு வாழ்வும் வந் தெய்துகிறது. இது உண்மையா, அல்லது பொய்மையா என்றால் இரண்டிற்கும் வள்ளுவரின் வான்மறை வாக்களிக் கின்றமையின் இரண்டையும் கொள்ளவேண்டியதா கின்றது.

**வள்ளுவரின் வாக்கு**

மனிதனின் உள்ளத்திற்கேற்பவே வாழ்க்கையும் உயரும் என்பதனை "வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம், உள்ளத்தனையது உயர்வு" என்ற குறள் மெய்ப்பிக்கின்றது. இத்தகைய உறுதிமொழியில் கூறும், வள்ளுவருக்கு ஏனோ அதனில் ஐயம்கொண்டு கூறுகின்றார். "நீ எண்ணுவதெல்லாம் உயர்வாகவே இருக்கட்டும். அது உனக்கு கிட்டினாலும் கிட்டாவிட்டாலும் நீ அந்த எண்ணத்தினின்று சோர்வு அடையக்கூடாது" என்ற கருத்தை அவரது வாய்மொழி உண்மைப் படுத்துகின்றது.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

என்பது குறள். இதற்கு உரை கூறவந்த பரிமேலழகர் "......அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து" என்ற அடிகளை எடுத்துக்காட்டி '......தள்ளிய வழியும் தாளாண்மையில் தவறின்றி நல்லோராற் பழிக்கப்படாமையின் தள்ளாவியற்கைத் தென்பதாம்" என்று அதனைத் தள்ளிவிடுகின்றார். எனவே வள்ளுவப்பெருந்தகைக்கு-மனிதனின் முயற்சியில்-நினைவில்–கொள்கையில்-வெற்றி, தோல்வி இரண்டும்வாய்க்கும் என்பதனை உறுதியாகக்கொண்டிருக்கின்றார் என்பது உண்மையாயிற்று அன்றோ.

......"நல்லோராற் பழிக்கப்படாமையின்..." என்று உரையாசிரியர் பரிமேலழகர் கண்ட நல்லோர் யாவர்?என்ற வினா எழுகின்றது. இதற்கு விடை காண அவாவுரின் இந்த நல்லோரையும்-வள்ளுவர் வாய்மூகத்தானே காணலாம். அவ்விடத்தேதான் பரிமேலழகர் தாம் கூறும் நல்லோருக்கு இலக்கணத்தை பெய்துவைக்கின்றார். அதாவது: "உயர்ந்தோர் பலரானும் சென்ற நெறியின் கண்ணேயும், அவர்

விண்ட நூலிடத்தும், காட்டிய அறிவிற்கேற்ப காலத்திற் கேலாதனதள்ளி, சொல்லாதனவற்றுள் ஏற்றனகொண்டு ஒழுகி வருதலே சிறப்புடையது. கல்விக்குப் பயன் அறிவும், அறிவிற்குப்பயன் ஒழுக்கமும் ஆகலின் அவ்வொழுகலைக் கல்லாதவர் பலகற்றும் அறிவில்லாத இனத்தைச் சார்ந்த வர் எனவே 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்று வரன் முறைவைத்துக் கூறினர் வள்ளுவர்'' என்றுகாரணகாரியத் தொடர்புவைத்து விளக்கிக் காட்டுகின்றார் உரையாசிரியர். (பரிமேலழகர்-குறள்-140-உரை) இதனில் இத்தகைய ஒழுக்கப்பாகுபாடுகொண்டவரே வள்ளுவர்கூறும்நல்லோர் என்ற பெயருக்குப் பொருந்துவர் என்பது பரிமேலழகரின் கூற்றாகும்.

**நல்லோரே பண்பாளர்**

இதனால் உலக நடையினை அறிந்து அதற்கேற்பவே தம் வாழ்க்கையினை பொருத்தி அமைத்துக்கொள்ளவேண் டும். அதுவே சிறப்புடைத்தாம், இதனையே வள்ளுவர் ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார்அறிவிலா தார்'' என்று கூறுகின்றார் இக்குறட்கு உரைவகுத்தபரிமே லழகர், 'ஒட்ட' என்றதற்குப் பொருந்த என்ற பொருளு ரைத்து உலகத்தோடு பொருந்தி வாழ்கின்ற வாழ்வினைப் பெற்று ஒழுகல்வேண்டும் என்று மேற்கூறியாங்கு உரை வகுத்துக் காட்டியுள்ளார். அவரே பண்புடையரும் ஆவர். இதனை ''பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்'' என்று கலித்தொகையில் நெய்தற் கலியும் விளக்கிக் காட்டு கின்றது.

**நச்சரின் நல்லுரை:**

''அதாவது உலக ஒழுக்கம் அறிந்து, உலகம் விரும் பச்செய்வதே பண்பாகும்'' என்று உச்சிமேற் புலவர்கொள்

நச்சினார்க்கினியர் அதற்குநல்லுரைகூறுகின்றார் இத்தகைய பண்பினை அதாவது உலக நடையினை—காலத்திற்கேற்ற ஒழுக்கத்தினைக்கொண்ட நெறியாளரே (பண்பாளர்)உலக நடை அறிந்தவர்—உயர்ந்தோர்-நல்லோர் என்கின்றது வள்ளுவமும் அதன் உரையாசிரியரும். பண்பாளர் என்கின்றது கலியும் அதன் உரையாசிரியர் நச்சினார்க்கினியரும்.

**தொல்காப்பியச் சான்றோர்.**

பண்பாளரைச் சான்றோர் என்று குறிக்கின்றார் தொல்காப்பியர். "சான்றோர் என்பார் எவ்வகையானும் தம்மாட்டுத் தீங்கு இல்லாத குணத்தைப் பெற்றுக்கொள்ளுபவர்" அதாவது "அன்பு, நாண்ஒப்புரவு,கண்ணோட்டம், வாய்மை, என்ற ஐந்துடன் சால்புகொண்டவர்" என்பதே அதன் விளக்கம் எனவேஉலகவாழ்க்கையில்கொள்ளவேண்டியவற்றுள் இன்றியமையாதது 'பண்புடைமை' யாகும் என்பது தெள்ளிது.

**பண்புடைமையின் இன்றியமையாமை**

மனிதன் வாழ்கின்ற நேரங்களிலே, 'பண்பும் அறிவும், ஒழுக்கமும் பெற்றுத்தான் இருத்தல்வேண்டும். இவை மனிதர்களிடத்தில் இயல்பாக, அமையவும்பெறும், வலிந்து கொள்ளவும் வேண்டும், இதுவே மனித சமுதாயத்திற்குரிய பெருந்தன்மை. "பண்பும், அறிவும், பிறகுணங்களும் ஒருவரிடத்தில் இயல்பாக வந்தெய்தவில்லை என்றால், அவனை இழிக்கின்றது, பழிக்கின்றது, மக்கட் பிறவியற்றது என்றெல்லாம் உலகம் பேசுகின்றது." என்று ஏங்குகின்றது சில இள உள்ளங்கள். என்செய்வது,

"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாமை

அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்''
என்ற நெய்தற் கலிக்கிணங்க அவர்களது பேதைமையினை அறிவுள்ளங்கள் பொறுக்கத்தான் வேண்டும்.

எனவே இத்தகைய கலியும், ''பண்புடையார்ப்பட் டுண்டு உலகம் அதுஇன்றேல், மண்புக்கு மாய்வது மன்'' என்ற வள்ளுவமும்-வள்ளுவத்திற்கு உரைவகுத்த ஆசிரியர் பரிமேலழகர் மேலும் மேலும் அழுத்திக் கூறியிருக்கின் றனர்.

'உலகத்தோடு ஒட்ட' என்ற தொடரில் 'ஒட்ட' பொருந்த என்று பொருளுரைத்து, கல்வியும், ஒழுக்கமும் கடைப்பிடித்து, அதற்கேற்ப உலகத்தோடு பொருந்திய வாழ்க்கையினை அறிவு நூற்களில் ஏற்பனகொண்டு, சொல் லாதனவற்றுள் சிறந்தவை எடுத்து வழி நடப்பவரே சான் றோர்-உலக நெறியாளர்-பண்பாளர் என்று எண்ணச்செய் துள்ளார். எனவே பண்பு என்பது காலத்தால் கொண்டி ருத்தல் இன்றியமையாததாயினும் காலத்திற்குப் பொருந் தக்கொள்ளவேண்டும் என்பதுவலியுறுத்தப்படுவதாயிற்று.

செந்தமிழ் இதழுக்கு மொழி, வரலாறு, அறிவியல், திறனாய்வு, கல்வெட்டு, ஆராய்ச்சி, இலக்கியம் என ஆக்கப்பூர்வமான கட்டுரை கள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரை எழுது வோர் தாளின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

—ஆசிரியர்.

# "அருமையும், பெருமையும்"

—✲—

புலவர்.

திரு. வி. சச்சிதானந்தம்.

உலகில் நாள்தோறும் பல அரிய காரியங்கள் நடைபெற்றுவருகின்றன. மனிதன் இமயத்தின் முடியிலும், ஆழ்கடலினடியிலும், குகைக்குள்ளேயும், வானத்தின் பரப்பிலும் சென்று மறைந்து கிடக்கும் பொருள்களை அறிந்து அறிமுகப்படுத்துகின்ருன். அறிவியல் துறையில் முன்னேற்றங் கண்ட இவ்விருபதாம் நூற்ருண்டில் விண்வெளியிலும், மண்ணுலகிலும் வியக்கத்தக்க செயல்கள் நிகழ்வதையும் காண்கிரோம். சமுதாயத்திலே ஒருவன் நன்ருக இசை பாடிஞல் அருமை என்கிரோம்; நடிப்பவனைக் கண்டு அருமை என்கிரோம்; அழகுடைய பொருளைக்கண்டு அருமை என்கிரோம்; அறிவிற் சிறந்தவனை அருமை என்கிரோம். பொல்லாத செய்தொழுகும் மாந்தரையும் அருமை எனப் பாராட்டும் நிலை ஏற்பட்டு விடுகிறது. நடைமுறையில் 'அருமை' என்பது ஒரு மனிதன் தன்னைவிட எந்தத் துறையில் சிறிது அதிக ஆற்றலுடையவனுகத் தென்படுகிருனே— எந்தச் செயல் சிறிது வியக்கத் தக்கதாக உள்ளதோ அதனையே குறிப்பதாகும் என்பதை அறிகிரோம்.

எல்லாச் செயலும் திறமையால் ஏற்படுவதேயாகும். திறமை என்பது பொதுச் சொத்து. இன்னவர்க்குத்தான் உரியது என்ற வரம்பு கிடையாது; நல்லார்க்கும் உரியது; பொல்லார்க்கும் உரியது; திறமையற்றவர் என்ற வகுப்பு இறைவனது படைப்பிலே கிடையாது சூழ்நிலை, ஊழ்வினை, சமுதாய அமைப்பு இவை காரணமாகச் சிலர் திறமையற்றவர்களைப் போலத் தென்படலாமே தவிர வேறில்லை. திறமையுற்றவர்கள் அரிய செயல் மட்டுமல்ல;

அடாதசெயலையும் செய்வார்கள். வாங்கும் கத்தி, உடையானைப் பொறுத்து வெங்காயம் நறுக்கவும் உதவும்; ஒருவனை வெட்டவும் உதவும். வெட்டுகிற காரணத்தால் கத்தியைப் பழித்துக் கூறிப் பயனில்லை. கத்தியை உடையவன் தான் பழிதற்குரியவன். அது போலத்திறமைநன்மைக்கும் பயன் படும்; தீமைககும் பயன்படும். நேர்மையாக பொருளீட்டுபவனைவிட கள்ள வாணிகம் செய்பவனுக்குத் திறமை அதிகம் தேவைப்படுகிறது. கடமையை ஒழுங்காகச் செப்பவனுக்குரிய திறமையைவிட 'காக்காய்' (கால் கை) பிடித்து வாழ்பவனிடம் திறமை அதிகமிருக்கிறது. திறமையைப் பண்படுத்திச் செய்யும் வினையே அரிய வினையாகும். அரிய செயல் செய்பவர்களையே பெரியவர்கள் என உலகம் பாராட்டுகின்றது; பெரியவரின் நிலை குறித்துப்பேசிய பெருநாவலரும் சுருக்கமாகச் 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்று கூறிச்சென்றுள்ளார்.

கோடிக் கணக்கான மக்கள் உலகிடைப் பிறந்து, வாழ்ந்து அழிந்தாலும் ஒருசிலரை மட்டும் தானே 'பெரியவர்' என்றும், 'அரியவர்' என்றும் உலகம் போற்றியுள்ளது! ஏன் இந்த நிலை? திறமை மட்டும் ஒருவனை பெரியவனுக்காது. திறமையை நல்வழியில் செலுத்துவதற்கும், தவருன பாதையில் செல்லும்போது இடித்துறைத்துத் திருத்துவதற்குமாக ஒருசிலரைத் தேடிக் கொள்ள வேண்டும். அவர்கள் யார்? வீட்டிற்கு துணைமனைவி, வெளியுலகிற்கு துணை நட்பு. மனைவியிடத்துச் சொல்லும் கருத்துக்கள் சில; மற்றவரிடத்துக் கூறும் எண்ணங்கள் சில. மனத்திலே தோன்றும் அத்தனை எண்ணங்களையும் கூறி, வருத்தம் போக்கித் தெளிவும், அமைதியும் பெறுகின்ற இடந்தான் நட்பு என்பது தன்னுடைய இயல்பிற் கேற்றவாறு தேடிக்கொள்ளாமல், தகுதி வாய்ந்த முறையில் பண்புடையாளரை நட்பாகப் பெற்றிருப்பானேயானல் அதுவே செயற்கரிய செயலாகும் என்பதை 'செயற்கரிய யாவுள நட்பின்'— என்ற வினவின் மூலம் விளக்கிக் காட்டுகின்ருர் வள்ளுவனர்.

திறமையும், நட்பும் மட்டும் அரிய செயல் செய்வதற்கு— பெருமை பெறுவற்குப் போதாது. அரியசாதனைகள் பல புரிந்த

விஞ்ஞானிகளும், மக்களை அடக்கி வாழ்ந்த மன்னர்களும், அறிவாலும், திருவாலும் சிறப்புப் பெற்ற மனிதர்களும் நிறைந்திருக்க புத்தரின் அறிவையும், இயேசுவின் கருணையையும், வள்ளுவரின் ஒழுங்கையும், வள்ளலாரின் உணர்வையும் மட்டும் அருமையுடையது; பெருமையுடையது; என உலகம் போற்றுகிறது. ஏன் இந்த நிலை? ஒரு சிலர்க்கு மட்டும் உரித்தாக விளங்குகின்ற அருமையும் பெருமையும் மாந்தரனைவரும் பெறவழியுண்டா? ஏன் அவர்கள் மட்டும் பாராட்டப்படுகின்றார்கள்? வாழ்வுப்பெருநூலாகிய திருக்குறளில் அருமை பெருமை பற்றிக் கூறுகின்ற கருத்துக்களை ஆய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறமை, நட்பு இவற்றோடு வீரமும் வேண்டும். வீரம் என்பது என்ன? பழிக்குப் பழிவாங்குதல் வீரமா? படைக்கலக் கருவி கொண்டு மக்களை வதைப்பது வீரமா? வஞ்ச நெஞ்சம் கொண்டு பிறரை வருத்துவது வீரமா? அதிகார வெறி கொண்டு பிறரை அல்லற் படுத்தி அடக்கியாள்வது வீரமா? போட்டியிலே வெற்றி பெற்று பொறாமைக்கும், பூசலுக்கும் இடம் கொடுப்பதுதான் வீரமா? இவையாவும் வீரத்தின் சிறு பகுதியாகலாம். முழுவீரம் என்பது தன்னலத் தேய்வில், பிறர் இன்னலைத் துடைப்பதில், பிறர்செய்யும் கொடிய செயலைப் பொறுத்துக் கொள்வதில், பழி பாவங்களுக்குப் பயப்படுவதில், அதிகாரமிருப்பினும் தவறான வழியில் பயன்படுத்தாதிருப்பதில், அடக்கமும் பணிவும் மேற்கொள்ளுவதில் தான் ஒளிவிட்டு விளங்கும். செந்தமிழ்ச் சான்றோராய சேக்கிழாரடிகள்.

''ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையத்தோ''—

என்ற பாட்டின் மூலம் இரக்க குணம் உள்ளவர்களே குறைபாடு இல்லாதவர்கள். அத்தகைய வீரத்தை எவ்வாறு விளம்புவது என்று வியந்துரைக்கின்றார் மனித வாழ்விற்கெனத் தன்னை பயன் படுத்தியவர்களே வீரமுடையவர்கள். கருணையுள்ளம் கொண்டவர்கள் எப்பொழுதும் பிறருக்கு உதவிபுரிந்து வாழ்வார்

கள். உதவி என்பது பிறருக்குத் தேவையானது என்பதை அறிந்து கொடுப்பது; உள்ளன்போடு கொடுப்பது; நிலையறிந்து நல்வழியில் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நினைத்துக் கொடுப்பது; உதவியின் அளவு சிறிதாயினும் செயப்பட்டாரின் சால்பிற் கேற்பப் பயன் தருவது. அவ்வாறு ஒருவன் பிறருக்கு எவ்வித உதவியும் செய்யாமல் அடுத்தவர் அவனுக்குச் செய்த — செய்கின்ற உதவிக்கு ஈடாக எவ்வுலகத்தை கொடுத்தாலும் ஈடாகாது என்பது மட்டுமல்ல அரிய செயலுமாகும் என்பதை உணர்ந்து கூறுகின்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

''செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமும் மாற்ற லரிது''—(குறள் 101)

என்பது குறளாகும். செயல் செய்வதற்குக் காலமும் கருவியும் தேவை. காலம் வேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. மக்களின் கருத்துக்களும் மாறிக் கொண்டே யிருக்கின்றன. பழையன கழிதலும், புதியன புகுதலுமாகிய செயல்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. ஒரு காலத்து ஆரியன என்று போற்றப்பட்ட செயல் பிறிதொரு காலத்துப் பொருந்தாதன எனப் புறக்கணிக்கப்படுகின்றன. ஆகவே காலநிலைக் கேற்றவாறு செயல் செய்ய வேண்டும். கருத்தால் செய்யும் காரியங்கள் சில; கருவியாற் செய்யும் காரியங்கள் சில. காலம், கருவி இவற்றை நன்கு அறிந்த ஒருவன் செயலை மேற்கொள்ளின் முடியாதது ஒன்றுமில்லை. இதனை,

''அருவினை என்ப உளவோ கருவியாற்
கால மறிந்து செயின்''—(483)

என்ற குறள் தெரிவிக்கின்றது. ஆண்டி முதல் அரசன் ஈராகவுள்ள அனைத்து மாந்தர்க்கும் மறதி உண்டு. மறதியால் நன்மைகளும் உண்டு; தீமைகளும் உண்டு. நற்செயல்களுக்கு மறதி பகை; தீச் செயல்களுக்கு மறதி உறவு. கடமையை மறந்தவர்களின் செயலால் நாட்டில் ஏற்பட்ட— ஏற்படும் கேடுகள் பல.

பொறுப்புள்ள அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்கள் கடமையுணர்ச்சி இல்லாதவர்களாக, தாம் எப்படியாவது வாழ்ந்து விட்டால் போதும் என்று நினைக்கின்ற தன்னலப் பேய் பிடித்தவர்களாக— செல்வாக்கு பெற வேண்டி நீதியையும், நேர்மையையும் மறந்தவர்களாக இருப்பார்களேயானால் நம்பி வாழ்கின்ற அத்துணை மக்களும் எப்படி நன்கு வாழ முடியும்? அத்தகைய மறதியுடையவர்கள் —கடமையை மறந்தவர்கள் எவ்வாறு அரிய செயல் செய்ய முடியும்? நீட்டித்துச் செய்யும் நிலை, மறதி, சோம்பல், அதிக உறக்கம் இந் நான்கும் தீயவர்கள் விரும்பியணியும் ஆபரணங்கள் என்று அறிவுறுத்துகின்றார் அறிஞர். எனவே மறதியின்றி ஒரு காரியத்தைச் செய்வோமானால் அரிய காரியம் என்ற ஒன்று உலகிடை கிடையாது என்று கூறுகின்றது குறள்.

> ''அரியவென் றாகாதா வில்லைபொச் சாவாக்
> கருவியாற் போற்றிச் செயின்''—(537)

என்பது குறளாகும். அரிய செயல் செய்வாருக்கு மருளுண்டாக்குவது பொருளே. பொருளின் காரணமாக பொல்லாத செயல்கள் நிகழ்வதையும், அதே நேரத்தில் பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்பதையும் அறிவோம். எல்லோர்க்கும் பொருள் மீது ஆசை உண்டு. ஆனால் பொருள் தேடும் வகையில்—துறையில் ஆர்வம் இல்லை. ஏமாற்றிப் பிழைப்பதும், பிறர் உழைப்பால் உண்பதும், குறுக்கு வழியில் பொருளீட்ட விரும்புதலும், கையூட்டு பெறுதலும் சமுதாயத்திலே நீக்கமுடியாத — நீங்காத செயலாக ஆகிவிட்டன. பொருள் உள்ளவர்கள் அருள் உடையவர்களாக மாறினாலன்றி வேற்றுமைகள் மறையாது என்பதை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பேயே வள்ளுவர் உணர்ந்து பொருளையும் அருளையும் இணைத்து ஒரே குறளில் கூறி வலியுறுத்தியுள்ளமை வியப்பிற்குரியதாகும். பொருளும் அருளும் போட்டியிடின் பொருளையே பெரும்பாலும் விரும்பி ஏற்பர். சிறுபான்மையோரே அருளை நாடிச் சிறப்பர். அருள் நல்லவரிடத்திலே மட்டும் நிற்கும்; பொருள் பொல்லாதவரிடத்திலேயும் இருக்கும். பொருள் உடையானை வாழவைக்கும்; அருள் எல்லோரையும் வாழவைக்

கும். பொருள் இம்மையில் பயன் தரும்; அருள் இருமையிலும் பயன் தரும். பொருள் தன்னலத்தை வளர்க்கும்; அருள் பிறர் நலத்தை நாடும். பொருள் சென்ருல் வருவது; அருள் போனுல் வராதது. எளிமையாகக் கொள்ளக் கூடியது பொருள்; அருமை பெறக்கூடியது அருள். அரியவினை செய்வோர் அரிய பொருளான அருளையும் மேற்கொள்ளல் வேண்டும். இத்தகைய கருத்துக்கள் நிறைந்த குறட் கருவூலத்தைக் காண்போம்.

> ''பொருளற்ருர் பூப்பர் ஒருகால் அருளற்ருர்
> அற்ருர்மற் ருதல் அரிது''—(248)

என்பது குறளாகும். 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்'—என்று குறளும், 'பிறர்க்கென வாழ்கின்ற பெரியோர்களால் இவ்வுலகம் உண்டு'— என்று புறநானூறும், 'எவ்வழி நல்லவர் ஆடவர்— அவ்வழி நல்லை வாழிய நிலனே'— என்று ஔவையாரும் கூறுகின்ற பெரியோர்கள் யார்? அவர்களே சான்ருேர்கள்; அரிய காரியம் செய்ய வல்லவர்கள். எல்லா நற்குணங்களும் அமைந்து கிடப்பதே சான்ருண்மை எனப்படும். மனித வாழ்வின் முழுத்தன்மையை அடைந்தவர் அமரரே. மனத்தை அடக்கி அறிவு வழிப்படுத்தியவரே சான்ருேர். நீர் மேல் நடக்கலாம்; நெருப்பில் குளிக்கலாம்; வானத்தில் பறக்கலாம்; ஆனுல் மனத்தை மட்டும் அடக்க முடியாது. 'மனமெனும் ஓர் பேய்க்குரங்கு மடப் பயலே.' என்ருர் வள்ளலாரும். அடக்கமுடியாத மனத்தை அடக்கியவரே அரிய செயல் செய்தவராவர். சான்ருேர், அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை முதலியன உடையவர்; சிறியவரிடத்திலும் தோல்வியை ஒப்புக்கொள்ளும் தன்மையுடையவர்கள்; இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யும் இயல்புடையவர்கள்; ஊழி பெயர்ந்தாலும் உறுதி தளராத உள்ளம் உடையவர்கள். இத்தகைய சான்ருேர்களை— அறிஞர்களை எந்த நாடு போற்றுகிறதோ —பெற்றிருக்கின்றதோ அந்த நாடுதான் வாழும்— முன்னேற்றமும் அடையும். அதிகமாகத் தமிழகத்திலே தக்கவர்களைப் பாராட்டி போற்றும் பழக்கமும், உயிருடன் இருக்

கும் போது பாதுகாக்கின்ற தன்மையும் எவ்வாறு மறைந்து விட்டது. உழைக்காதவர்களும் எவ்வாறு பொருளீட்ட முடிகிறதோ அதுபோல தகுதியில்லாதவர்க்கும் புகழமைந்து விடுகிறது. உலக அரங்கின் நடுவிலேவைத்துப் போற்றக் கூடிய சான்றோர் உலகத்தின் மூலையிலே, காலத்தின் கோலங்கண்டு பெயர் கூடத் தெரியாமல் ஒதுங்கி வாழ்கின்றார்கள். அவர்களை எல்லாம் தேடிக் கண்டு பிடித்து, ஆவன செய்து போற்றலே தமிழரது கடமையாகும். தமிழகத்திலே பிறந்துவிட்ட குற்றத்திற்காக எத்தனையோ பெருமக்கள் உள்ளம் நைந்து, உருக்குலைந்து உயிரை விட்டிருப்பதை காண்கிறோம். இனியாவது தமிழக அரசும் மக்களும், தக்காரை —பெரியவர்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அத்தகைய பெரியவர்களைப் போற்றிக் காப்பதே அரிய செயல்களெல்லாவற்றினும் சிறந்தது என்று தெரிவிக்கிறார் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்.

> "அரியவற்று ளெல்லாம் அரிதே— பெரியாரைப்
> பேணித் தமராக் கொளல்." (443)

என்பது குறளாகும். இதுவரை குறளிலே உள்ள அருமையைக் கண்டோம். இனிப் பெருமையைக் காண்போம். அருமையானவர்களும், அரிய செயல்களும் பெருமைக்கு உரியனவேயாகும். பெருமையாளர் இன்னார் என்ற பட்டியல் ஒன்றைப் பெருநாவலர் தருகின்றார். அன்னாரது இயல்பு அறிந்தால் பெருமையும் இன்னது என அறிந்து கொள்ளலாம். நீத்தார், துறந்தார், அறம் பூண்டார், நிறைமொழி மாந்தர் ஆகியவர்களே பெருமைக்கும் உரியவர்களாவர். நீத்தார் யார்? உலகப் பற்றுக்களை நீத்தவர்களே நீத்தார். பற்றுக்களை விடுவது யாரால் முடியும்? உறுதி கொண்டவர்களால் இயலும். உறுதி கொண்டவர்களெல்லாம் பற்றுக்களை விடுத்தவரா? இல்லை. நல்லொழுக்கத்திலே தளராத உறுதி கொண்டவர்க்கு மட்டுந்தான் பற்றுக்களை நீக்கி வாழும் திறமை உண்டாகும்.

(தொடரும்)

# வள்ளலார் வளர்த்த தமிழ்

புலவர்.
**தி. நா. அறிவுஒளி.**

(சென்ற இதழ் 92-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணவோட்டம் மிக விரைவாக வரும்போது, இக் கருத்துக்களை மிகநீண்ட தொடரால்தான் அமைக்கவேண்டியுள்ளது. பண்டையப்புலவரும் அடிமிக்க பாவால் தம் கருத்தை உணர்த்தியமை இதனாலேயாம். இராமலிங்கரும் நீண்ட தொடரால் உரைநடையமைத்திருக்கிறார். 'அருள்' என்பது என்ன? என அடிகள் விளக்கும் பகுதி நெடிய உரைக்குச் சான்றாக உள்ளது.

"கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருள் எந்த வண்ணம் உடையது என்றறியவேண்டில், சொல்லுவார் சொல்லும் வண்ணங்களும், நினைப்பார்நினைக்கும் வண்ணங்களும், அறிவார் அறியும் வண்ணங்களும் அனுபவிப்பார் அனுபவிக்கும் வண்ணங்களும் ஆகிய சர்வசக்தி வண்ணங்களும், தனது ஏகதேசவண்ணங்களாக விளங்க விளக்கி விளக்குகின்ற பூரண விளக்க வண்ணத்தையுடையதுஎன்று அறியவேண்டும் அந்த அருள் எவ்விடத்து விளங்குகின்ற தென்றறியவேண்டில், நோக்குவார் நோக்குமிடம் நோக்கப் படுமிடம், கேட்பார் கேட்குமிடம் கேட்கப்படு மிடம், சுவைப்பார் சுவைக்குமிடம் சுவைக்கப்படுமிடம், முகருவார் முகருமிடம் முகரப்படுமிடம், பொருந்துவார் பொருந்துமிடம் பொருத்தப்படுமிடம், பேசுவார் பேசுமிடம் பேசப்படு

மிடம் விடுவார் விடுமிடம் விடப்படுமிடம், நினைப்பார் நினைக்குமிடம் நினைக்கப்படுமிடம், விசாரிப்பார் விசாரிக்குமிடம் விசாரிக்கப்படுமிடம், துணிவார் துணியுமிடம் துணியப்படுமிடம், தூண்டுவார் தூண்டுமிடம் தூண்டப்படுமிடம், அறிவார் அறியுமிடம் அறியப்படுமிடம், அனுபவிப்பார் அனுபவிக்குமிடம் அனுபவிக்கப்படுமிடம் முதலிய எவ்விடங்களிலும், எக்காலத்தும் விளங்குகின்றதென்று அறியவேண்டும். அந்த அருளை எதனாற்கூடுமென்றறியவேண்டில் சீவகாருணிய ஒழுக்கத்தினாற் பெறக்கூடுமென்றறியவேண்டும்'' (சீவகாருணிய ஒழுக்கம்)

வடலூராரின் 'மனுமுறைகண்ட வாசகம்' திருத்தொண்டர் காப்பியத்துள் பாடப்பட்ட மகனைக்கொன்று முறைசெய்த மனுச் சோழன் கதையேயாம். இடைக்காலத்தில் கதைகள் எழுதப்பட்ட முறையை ஆராய்வோருக்கு அடிகளின் இக்கதை மிகவும் இன்றியமையாதது. இவர் ஒரு கதையாசிரியராக விளங்குவதை எவரும் கருதிப் பாராதது வியத்தற்குரியதன்றோ? இக்கதையிலும் மிக நீண்ட தொடர்களே மிகுதியாக அமைந்துள்ளது. ஒரு சில சிறிய சொற்றொடர்களும் உள்ளன. இக்கதையின் முதல் சொற்றொடரே 169 சொற்களால் அமைந்த ஒரே தொடராக உள்ளது எனின், பிறவற்றை உய்த்துணரலாம் தமிழ் உரைநடைத்துறையில் நெடிய சொற்றொடர் அமைத்து எழுதியோருள் இராமலிங்க அடிகளும் குறிப்பிடத்தக்கவராவார்!

கதை எழுதும் முறையில் இவர் காப்பிய மரபையே பின்பற்றியுள்ளார். சோழன் செங்கோன்மையை விளக்கி, அவன் நாட்டில் துன்பமேயில்லை என்பதைத் தெரிவிக்குமிடத்து அடிகள் சுவைபொதுள எழுதிய உரைப்பகுதி எண்ணுதற்குரியது.

"அவரது ஒப்புயர்வில்லா அரசாட்சியிலே பூவே பறிபடுவது, புனலே சிறைபடுவது, காற்றே அலைபடுவது, கல்லே கடினமுடையது, மாவே வடுப்படுவது, வாழையே குலைபடுவது, வண்டே மதுவுண்பது, பந்தே அடிபடுவது, பரியே கட்டுண்பது, நெல்லே குத்துண்பது, நெற்கதிரே போர்படுவது, வயலே வளைபடுவது, மாதரிடையே குறைபடுவது, தரித்திரமே தரித்திரப்படுவது, துக்கமே துக்கப்படுவது, பொய்யே பொய்படுவது; இவையல்லாமல் பொருள்பறிக்கப்படுவோரும் சிறைச்சாலையில் வைக்கப்படுவோரும் பகைவரால் அலைக்கப்படுவோரும் கடின மனமுள்ளவர்களும் வடுப்படுவோரும் குலைபடுவோரும் மதுவுண்போரும் அடிபடுவோரும் குத்துண்போரும் போரிற்படுவோரும் கட்டுண்போரும் வளைபடுவோரும் குறைபடுவோரும் தரித்திரப்படுவோரும் துக்கப்படுவோரும் பொய்படுவோரும் வேறேயில்லாமையால் அந்நாட்டில் மேன்மையே விளங்கியிருந்தது." (3-வது தொடர்)

இவர் எழுத்தால் அக்கால மன்னர் ஒப்பனை முறைகள் தெளிவாகத் தெரிகிறது வீதிவிடங்கன் கோயிலுக்குச் செல்ல எவ்வாறு தன்னை ஒப்பனை செய்துகொண்டான் என்பதை நீண்ட விளக்கத் தொடரால் விளக்கியுள்ளார்.

"அவ்விடையைப் பெற்றுக்கொண்ட வீதிவிடங்கன், தன் அரண்மனைக்கு வந்து தயிலம், சந்தனம், கத்தூரி,பால், தயிர், நெய், பழம் முதலான அபிடேக திரவியங்களும், மாணிக்க மாலை, மரகதமாலை, முத்துமாலை, பவளமாலை, பொன்மாலை, வச்சிரமுடி. இரத்தினகுண்டலம் முதலான திருவாபரணங்களும்; கொன்றைமாலை, தும்பைமாலை, வில்வமாலை, சண்பகமாலை, முல்லைமாலை, மல்லிகைமாலை முதலான திருமாலைகளும்; வெண்பட்டு, கோசிகப்பட்டு,

பீதாம்பரம் முதலான திருவாடைகளும், மற்றும் வேண்டிய திரவியங்களெல்லாமுந் தியாகேசர் கோவிலுக்குக் காரியக்காரர்கள் வசத்தில் முன்னதாக அனுப்புவித்து, பின்பு தான் மஞ்சனச்சாலையில்வாசநீராடி வெண்பட்டுடுத்துச் சிவத்தியானத்துடன் திருநீறு தரித்துத் திலகமணிந்து, கிரீடம், குண்டலம், கண்டசரம், வாகுவலயம், பதக்கம், சரப்பளி, கடகம், ஆழி, பொற்பூணூல், பொன்னரைஞாண், உதரபந்தனம், வீரகண்டை முதலான பூடணங்களும் பூண்டு, சோதிமயமான பீதாம்பரவுத்தரியம் மேலேதரித்து நவரத்தினமிழைத்தவொரு பொற்பிரம்பைக் கையிற்பிடித்துக்கொண்டு அரண்மனை வாசலைவிட்டு வெளியே புறப்பட்டு, வேதபாரகராகிய வேதியர் முதலானவர்களுக்குப் பல பல தானங்கள் செய்து, மனோவேகமும் பின்னடையத் தக்க வேகமான நடையுள்ள நான்கு குதிரை கட்டிய மகாமேருவைப்போல உயர்வுள்ள இரத்தின கசிதமாகிய இரதத்தின்பேரில் ஆரோகணித்துக்கொண்டனன்.''

இவ்வீதிவிடங்கன் உலா வரக்கண்ட மகளிர் அவனழகில் மயங்கி உரைகூறுவதாக ஒரு பகுதியை அடிகள் அமைத்துள்ளார். அப்பகுதியில் வீதிவிடங்கனின் உருவ அழகு உச்சிமுதல் உள்ளங்கால்வரை மிக அரிய நெடுந்தொடரால் விளக்கப்பட்டுள்ளது.

''சில மாதரோ, ''வாசமுள்ள தயிலம்பூசி மணமுள்ள மலர்மாலை சூழ்ந்து வாழைப்பூ விதழ்போலவகிர்ந்து குயில் முகம்போல முடியிட்டுப் பளிங்குச் சிமிழ்க்குள்ளிருந்து தோன்றுகின்ற பருத்த நீலக்கல்போல தாவள்ளியமான தலைச்சாத்துக்குள்ளிருந்து சிறுகித்தோன்றுகின்ற குடுமியும், பார்க்கின்றவரது பார்வைக்கு இன்பந்தருகின்ற தோற்றமும், மாறுத மலர்ச்சியும், மனோரஞ்சிதமான அழகும், குளிர்ச்சியும் ஒளியும் பெற்றுச் செந்தாமரை மலர்போல்

விளங்கும் முகமும், கருமை மிகுந்து செம்மை கலந்து காருண்ணியந்ததும்பி இங்கிதமறிந்து சிறிதே யிமைத்து மனோரம்மியமாய் மலர்போன்று நீண்ட கண்களும், ஒளி கொண்டு உயர்ந்து நீண்ட நாசியும், குண்டலமணிந்து நீண்டு அகன்ற செவியும், திரிபுண்டரந்தரித்துத் திலகந் தீட்டி அழகுபெற்று அகன்று உயர்ந்த நெற்றியும், பவளம் போற்சிவந்து திரண்ட உதடும், முல்லையரும்புகள்போலச் சிறுத்து நெருங்கி யொளிவீசும் பற்களும்; குறுகி மென்மையாகிச் சிவப்பேறிய நாவும், கண்டசர முதலான ஆபரணங்களையணிந்து வலம்புரிச் சங்குபோல் திரண்ட கண்டமும், மத்தளம் போலத்திரண்டு, மந்தரமலைபோல உயர்ந்து கண்டோர்கண்களையுங் கருத்தையுங்கட்டுகின்றசுகந்தமாலையணிந்த வெற்றியுள்ள தோள்களும், வீணைத் தண்டு போல நீண்டு தாழ்ந்து கடகமணிந்த கையும், தாமரை மலர்போற் சிவந்து மிருதுவாகிய மழைபோற் சொர்ணம் பொழிகின்ற முன்கையும், விளக்கமிகுந்து பதக்க முதலானவை யணிந்து களப கஸ்தூரிகள் பூசிக் கண்ணாடிபோல அகன்று மலைபோல வுயர்ந்த மார்பும், சிறுத்துயர்ந்த வயிறும், ஆழ்ந்து அழகு பெற்ற உந்தியும், யானைத் துதிக்கை போன்று திரண்ட தொடையும், வட்டந் தோன்றுது தசை கொண்டு செழிப்புள்ள முழங்காலும், திரண்டு நீண்ட கணைக்காலும், தாமரை மலர்போன்று வீரகண்டை யணிந்த கால்களும், வரம்புகடவாத வடிப்பமுள்ள வடிவமுடைய இந்த இராச புத்திரனைக் கண்டுகளிப்பதற்கு நானென்ன தவஞ் செய்தேனோ?'' என்றும்—''

இவ்வாறு விளக்கம் வரைவதிலும் அடிகளின் துறவுள்ளம் ஈடுபட்டமைகண்டு நாம் வியக்கின்றோம். இக்கட்டுரையினிடையேதான் மனுச்சோழன் வருந்தும்முறையில், 'நல்லோர் மனத்தை நடுங்கச்செய்தேனோ?' எனத்துவங்கும்

அரியசெய்யுள் இணைக்கப்பட்டுள்ளது.

மகன் கொலைக்குற்றஞ் செய்ததைக் கேட்டுச் சோழ மன்னன் வருந்தும் இடம் உரைவளம் மிகுந்துள்ளது (இவ்வாறு வருந்தும் உரை கதையின் உணர்வோட்டத்தைத் தடுத்துச் 'சுவை மாற்றம்' விளைவிக்கிறது. ஆயினும் அக்காலக் கதையெழுதும் 'பாணி' எவ்வாறிருந்தது என்பதை அறிய இப்பகுதி உதவும்.)

"ஆ! நான் நீதி தவறாது அரசு செய்கின்றேனென்பதை நினைத்தால் எனக்கே ஏளனமாக விருக்கின்றதே! சேங்கன்றைத் தெருவிற் சிதைக்கவும் ஒருமித்திருந்த என் செங்கோலை அளவுகோலென்பேனோ! அஞ்சனக்கோலென்பேனோ! எழுதுகோலென்பேனோ! ஏற்றக்கோலென்பேனோ! கத்திரிக்கோலென்பேனோ! கன்னக்கோலென்பேனோ! குருடன்கோலென்பேனோ! கொடுங்கோலென்பேனோ! துடைப்பக்கோலென்பேனோ! துலாக்கோலென்பேனோ! மரக்கோலென்பேனோ! வைக்கோலென்பேனோ! அல்லது இன்று இறந்த பசுங்கன்றாகிய பிரேதத்தைப் புரட்டிச்சுடுகின்ற பிணக்கோலென்பேனோ! என்னகோலென்றுதான் எண்ணுவேன்! இளங்கன்றைக் கொலைசெய்யச் சம்மதித்திருந்த என் ஆக்கிஞசக்கிரத்தைக் கிரகசக்கரமென்பேனோ! என்ன சக்கரமென்றெண்ணுவேன்! இந்தப்பசுவின் கன்றுக்கு அபாயம் நேரிடக் காத்திருந்த என்காவலைச் சிறுபெண் காக்கின்ற திணைக்காவல் என்பேனோ! குருடன் காக்கின்ற பொல்லைக் காவலென்பேனோ! புல்லாற்செய்த புருடன் காக்கின்ற புன்செய்க் காவலென்பேனோ! வரும்படியில்லான் காக்கின்ற வாயிற் காவலென்பேனோ! பயிரைக்காக்க வைத்த பண்ணைக்காவலென்பேனோ! வேலைவேண்டிக் காக்கின்ற வெறுங்காவலென்பேனோ! அல்லது இன்கன்றை அடக்கஞ்செய்யக்காத்திருக்கின்ற அரிச்சந்திரன் காவலென்

பேனே! என்னகாவலென்றுதானெண்ணுவேன்! என்ன செய்வேன்! ஐயோ! இப்படிப்பட்ட பாவியாகிய என்னை மநுவென்றுபேரிட்டழைப்பது காராட்டை வெள்ளாடென்றும், அமங்கள வாரத்தை மங்கள வாரமென்றும், நாகப் பாம்பை நல்ல பாம்பென்றும் வழங்குகின்ற வழக்கம் போன்றதல்லது உண்மையல்லவே!''

அமைச்சர்கள் அரசன் மகன் செய்த குற்றத்திற்கு கழுவாய்செய்துவிடலாம் என்று கூறுமிடத்தில் சோழன் அமைச்சர்களுக்குக் கூறும் அறிவுரைப் பகுதி மிகவும் உணர்ச்சியும் செறிவுமுடையதாக விளங்குகிறது.

ஓரிடத்தில், ''ஒருவரிடத்துத் தண்டனை விதிக்கும் போது எவ்வுயிர்களுந் தன்னுயிர்போல் எண்ணுவதும், எந்தப்பொருள் எந்தப் பிரகாரமாயிருந்தாலும் அந்தப் பொருளினுண்மையையறிந்துகொள்வதும், உருவு நோக்காது செய்வினை நோக்குவதுமாகிய இப்படிப்பட்ட இலக்கணங்களுக்குப் பொருந்த விதிக்கவேண்டுமென்று எனக்கு அறிவித்துவந்த நீங்கள், இன்று என் புத்திரன் இரக்கமுள்ளவனென்றும், அவன் அசாக்கிரதையினுல் கொன்றதல்லவென்றும், பழவினையாற் பசுங்கன்று மடிந்ததென்றும், அதனுல் அதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விக்கவேண்டுமென்றும், வாதியை மாத்திரம் வரவழைத்துக்கொண்டு நடுக்கொள்ளைக்காரன் நியாயந்தீர்த்தானென்பதுபோற் சொல்லி நின்றீர்கள்!'' என்று அடிகள் எழுதியுள்ளவை இக்காலத்துக்கும் இனியும் பயன்படும் அறக்கருத்தாகும்.

இவர் உரைநடையில் பலப்பல மரபுத் தொடர்கள், உவமைகள், பழமொழிகள், விளக்கத் தொடர்கள் பயின்

றுள்ளன. *

இக்கட்டுரைக் கதையில், "நாம்வேண்டி ஓருயிரைப் பிறப்பிப்பதற்குச் சுதந்திரமில்லாதபடியால் நாம் வேண்டி ஓருயிரை யிறப்பிப்பதற்கும் சுதந்திரமில்லை" என்றகருத்தை அருமையாக ஆசிரியர் வற்புறுத்துகிறார்.

ஏனைய கட்டுரைகள் அக்கால மறுப்பு—ஒறுப்பு—எதிர் மறுப்புச்கட்டுரை வகைகளில் அடங்குவன; இலக்கியத் தன்மையில்லாதன.

---

* 'பொன் கத்தியென்று கழுத்தரிந்து கொள்ளலாமோ?' 'கும்பகோணத்துப் பள்ளன் கொள்ளைகொண்டுபோகத் தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டங்கொடுத்தான்'; 'முற்ற நனைந்தார்க் கீரமில்லை!', 'பாவிக்குப் பாக்கியந்தங்காது', 'குள்ளனைக் கொண்டு ஆழம்பார்க்க வந்ததுபோல', 'பேயைத் தெய்வமென்று பிள்ளைவரம் கேட்க வந்ததுபோல', 'கொல்லையாள் காட்டியைக் கூலிகேட்கவந்ததுபோல்', 'விழலனிடத்து நிழலுக்கு வந்தது போல்', 'பழைய தரித்தரனுக்குப் பணம் கிடைத்ததுபோல', 'செல்வப்பிள்ளையாகாமல் தென்னம்பிள்ளையானனே!', 'அரசன் பிள்ளையாகாமல் அணிற்பிள்ளையானனே!', 'பட்டப்பிள்ளையாகாமற் பழிப்பிள்ளையானனே!', 'எழுத்தறியாதவன் ஏட்டைச்சுமந்ததுபோலவும் கண்ணில்லாதவன் கண்ணாடியைச் சுமந்ததுபோலவும்', 'தன்வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாதுவிடாது'. 'ஆனை மதப்பட்டு அடவி யழித்தது'. 'காக்கையேறி பனம்பழம் விழுந்தது', 'கருத்தறியாதவன் சொன்னதே கொள்வான்', 'மரபறியாதவன் மணம்பேச வந்ததுபோல்', 'நீண்டெரியுநெருப்பில் நெய்விடுவதுபோல்', 'கப்பல்உடைந்து கலங்கும்போது தெப்பமும் உடைந்ததுபோல்', 'கொண்டமனையாளிருக்கக் கூலி வாங்கவந்தவளை தாலி வாங்கச் சொன்னதுபோல்', 'சோறுண்ணும்போது தொண்டை விக்கிக்கொண்டதுபோல்' முதலியன.

செய்யுளில் எளிமை புகுத்திய அடிகளார் அத்துறையில் எய்திய ஒப்பற்ற வெற்றி தமிழிலக்கிய வரலாற்றில் நிலையானதாகும். அவர் உரைநடைத்துறையில் ஓரளவே ஈடுபட்டார், தொடர்ந்து ஈடுபட்டிருப்பின் முதல் உரையாசிரியருள் குறிப்பிடத்தக்கவராக விளங்கியிருப்பார் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

'மனுமுறை கண்ட வாசகம்' தமிழ் உரைநடையில் ஒருகுறிப்பிடத்தக்க 'முதல் கல்' ஆகும். அதன் தகுதியினையே இவண் ஒருவாறு கண்டோம். மிகுதியான வட சொற்கள் இல்லாமலிருந்தால் இந்நடையில் இன்னும் பொலிவும் வலிவும் எழிலும் பொங்கித் துளும்பியிருக்கும் என்பதில் ஐயமில்லை. நல்ல குறிக்கோளுடனே கதை, கட்டுரை எழுதவேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக வடலூராரின் படைப்பு இலங்குவது எண்ணியமிதற்குரியதாம்.

செந்தமிழ் இதழ் பல அரிய செய்திகளைத் தாங்கி வருவதை தமிழுலகம் நன்கு அறியும். பல புதிய மாற்றங்களோடும் பொலிவோடும் செந்தமிழ் இதழ் மாற்றப்பட்டுள்ளது. ஆண்டுச்சந்தா ரூபாய் ஐந்தேதான். எனவே ஒவ்வொரு தமிழ் மகனின் கையிலும் அது திகழ வேண்டுமன்றோ? ஒவ்வொருவரும் ஓரிரு நண்பர்களைச் செந்தமிழுக்குச் சந்தாதாரர் ஆக்கி உதவுங்கள். அது தமிழுக்கு செய்த தொண்டு தமிழர்க்குச் செய்த தொண்டாகும்.

—பொறுப்பாசிரியர்

# துறைமங்கலம்-சிவப்பிரகாச அடிகள்

(பேராசிரியர், ஆ. சிவலிங்கனுர், மயிலம்)

## பண்பு நலம்

### திருமணம்.

உலகியலோடு தொடர்பற்ற ஞானநிலையை விரும்பியவர் கட்குரிய பண்புகளனைத்தும் நம் அடிகள் வாய்க்கப் பெற்றவர் என்பதை கூறத்தேவையில்லை. அண்ணுமலை ரெட்டியாரவர்கள் மணம் செய்து கொள்ள வேண்டிய காலத்தில் மறுத்து விட்டமையே இவர் உலகியலோடு தொடர்பு கொள்ள விரும்பவில்லை என்பதை விளக்கும். உலகியலோடு தொடர்பு கொள்ள விரும்பவில்லை யென்ருலும் உலகினர்க்கு அறிவுறுத்த வேண்டுவனவற்றை அறிவுறுத்தப் பின்வாங்கினவரல்லர். நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அறிவுறுத்துகின்ருர். உலகில் திருமணம் நிகழ்வதைக் கண்ட அடிகள் அது பற்றித் தமது கருத்தை ஒருபாடலில் தெரிவிப்பதைக் காணலாம்.

"விழைவொடு நினக்கு மாதுலன் மாமி
வேற்புவேண் டுருதுதன் மருகன்
மேலெலாம் எலும்புந் தோலுமாய்க் கிடத்தல்
வெறுத்திடா திளமைநா டாது
பழமலை தனக்குச் சாதியொப் பெனவே
பார்த்துனைக் கொடுத்ததுன் தந்தைப்
பனிமலை யென்னே தன்மனை யாட்டி
பயந்திடப் பெருமகள் என்ருே"

(பெரிய. நெடுங்.2)

இவ்வரிகளை யூன்றி நோக்கின் அடிகளின் கருத்து புலனுகும். இதனுள்,

பெண்ணுதவுங் காலைப் பிதாவிரும்பும் வித்தையே
எண்ணில் தனம்விரும்பும் ஈன்றதாய்— நண்ணும்
சூரியநற் சுற்றம் குலம்விரும்பும் காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்.

என்ற பாட்டின் கருத்துக்களும் அமைந்துள்ளன. சாதியொப்பு ஒன்றனையே கருதிக் கணவனாக வரப் போமவனைக் குறித்துப் பெண்ணை ஒன்றுமே கேளாது மணம் முடிக்கும் உலக வழக்கினை வெறுக்கின்றார் அடிகள். மாமனார் மாமியார் இல்லாத இடமாகப் பெண்ணைக் கொடுக்க வேண்டும் என்று எண்ணுகின்ற மூட எண்ணத்தையும் வெறுக்கின்றார். நல்ல தாய்தந்தையர்கள் தமது பெண்ணை மாமனார் மாமியார் உள்ள இடத்தில்தான் வாழ்க்கைப் படுத்துவர். ''அவர்களால்தான் தமது பெண் நல்ல முறையில் இல்லறத்தை நடத்த முடியும்; இல்லையேல் குரங்கின் கைப் பூமாலை போல இல்லறத்தைப் பாழ்படுத்தி விடவும் கூடும்'' என்று எண்ணுவர். அதனால்தான் 'மாதுலன் மாமிவெற்பு வேண்டுரு து கொடுத்தானே இமவான' என இரக்கப்படுகின்றார் அடிகள்.

இனி மற்றோரிடத்திலும் இவரது கருத்து வெளிப்படுதலைக் காணலாம். உடுதடை என்ற நகரில் நின்மலன் என்ற மறையவன் மனைவிக்கு மாதேவி என்பாள் மகவாகப் பிறந்தாள்; வளர்ந்தாள்; பருவப் பெண்ணாயினாள். ஒருநாள் அந்நகர் அரசன் கௌசிகன் என்பான் தெருவழியே உலாப்போந்தான். அவன் மாதேவியைக் கண்டான்; காதல் கொண்டான். அவளை யடைவதற்குரிய வழியை ஆராய்ந்தான். இறுதியில் சில பெண்டிர்களைத் தூதாக நின்மலர்பால் ஏவினான். அவர்கள் வந்து மாதேவியைக் கௌசிகனுக்குக் கொடுத்தல் வேண்டும் என்று வேண்டியதோடு, கொடுத்தால் மாதேவிக்கு உண்டாம் திருவின் நலங்களையும் எடுத்துக் கூறினர். உடன் நின்மலன் அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினான்.

இம்மை சேர்பயன் கருதியே தகாதவ ரிடத்தில்
கொம்மை வார்முலை மகட்கொடை நேர்ந்தவக் கொடியார்

அம்மை யாழ்நிரை யத்திடை வீழ்ந்தன ரழுந்திக்
தம்மை நோக்குநர் ஒருவரும் இன்றியே தளர்வார்.
தமக்க டாதது செய்துயிர் வாழ்வது தன்னிற்
சுமைக்க டாதமெய் விடுதலே நன்றெனச் சொல்வர்
எமக்க டாதது புகன்றனிர் மங்கைமீர் இச்சொல்
நுமக்க டாததென் றியம்பலு மங்கையர் நுவல்வர்.
(பிரபு. அக். துறவு. 20, 21)

அப்பெண்டிர்கள் நின்மலனைப் பார்த்து, 'நின்மலனே காட்டு வேட்டுவன் ஒருவன்—கையில் வாள் கொண்டிருப்பவன் காட்டில் எனக்கொரு பொருள் தருக என அங்கு வாழும் விலங்கினைக் கேட்பது போலும் நின்னை எம்மரசன் மகள் கேட்பது'' என்றார்கள். அதற்கு நின்மலன், ''எங்கள் மன்றல் வார்குழல் பேதையோ அல்லள்; நும் மனத்தைச் சென்று கூறுமின்; அவள் மனம் இசைந்து உரை செய்யின் நன்று; போமின்.'' என்று கூறினான்.

இவற்றால் பெண்ணின் தாய்தந்தையர் அவள் மனம் அறிந்தே ஒருவனுக்குத் திருமணம் செய்விக்க வேண்டும் என்று அறியலாம். ஒருபுலவன் கதைப்போக்கில்தான் தனது கருத்தைச் செறித்துச் செல்லவியலும். நம் அடிகள் கதைப்போக்கிலும், தனித்து இறைவனிடம் உரையாடுவது போன்ற வணக்கப் பாவிலும் தம் கருத்தை வெளிப்படுத்தியிருப்பது கருதத்தக்கது.

## பெண்மைபோற்றல்

''சேய்கொண்டாரும்'' என்ற பாடலில், ',பேய் கொண்டாலும் கொளலாம் பெண் கொள்ளலாகாதே'' என்று கூறியது கொண்டு அடிகள் பெண்களை வெறுக்கின்றவர் என்று சிலர் கருதக் கூடும். உண்மைபை அறிஞரே உணர்வர். அடிகள் துறவற நிலையை மேற்கொள்ள விரும்பியவர். அதனால் தம்மைத் திருமணம் செய்துகொள்ள வேண்டிய அண்ணாமலை ரெட்டியாரிடம், தாம் துறவு மேற்கொள்ள விரும்பியதையும், அதற்கு மணம்

ஏற்றதன்று என்பதையும், மனம்கொள்வதால் வரும் இன்னல்களின் கொடுமையையும் உணர்த்த வேண்டி, 'சேய் கொண்டாரும்' என்ற பாடலையும் 'நிட்டையிலே' என்ற பாடலையும் பாடினார். 'பேய் கொண்டாலும் கொளலாம் பெண் கொள்ளலாகாதே' என்ற கருத்து, பேய் கொண்டவன் படுந்துன்பங்களைக் காட்டிலும் துறவறத்தை விரும்பியவன் பெண் கொண்டால் மிக்க துன்பங்களையடைவான் என்பதாம். பேயைக்காட்டிலும் கொடியர் பெண்கள் என்பது கருத்தன்று. அதுவே அடிகள் கருத்தானால் அறிவறிந்த மக்கள் என்றதற்குப் பரிமேலழகர் கொண்ட உரையை மறுத்திருக்க மாட்டாரே! அன்றியும் தம் இருதம்பியார்க்கும் திருமணம் நிகழ்ந்த காலத்தில் தாம் வாழ்த்துக் கூறியபோது, 'ஐய நின்சென் மிசை' முதலிய பாடல்களில் ஊடற் சுவை ததும்பும்படியும், 'அரனவனிடத்திலே' என்ற பாடலில் மக்களால் அடையும் மகிழ்ச்சி வெளிப்படும்படியும் பாடிப் 'புத்திர மித்திர களத்திரருடன் மேன்மேலும் மிகவாழியே' எனவாழ்த்தியதும் அக்கருத்தினர் அல்லர் என்பதைப் புலப்படுத்துமன்றோ? அடிகள் துறவறத்தையே விரும்பியவர் என்பதற்கு அவர் வாக்குகள் பலவற்றை அவர் நூல்களில் காணலாம்.

## நன்றியறிதல்

சேக்கிழார் கம்பர் முதலியவர்களை தம்மைப் புரந்த அநபாயன், சடையப்பவள்ளல் ஆகியவர்களைத் தம் நூல்களில் ஆங்காங்கு வைத்துச் சிறப்பித்து நன்றியைத் தெரிவித்திருப்பது போன்று அடிகளும் தம்மைப் போற்றிப் புரந்த அண்ணாமலை ரெட்டியாரைச் சிறப்பித்துள்ளார்.

வேலுக்கு மம்புக்கு மாறுகொண் டோடும் விழிமடவாய்
மாலுக்கு நன்மனை யாள்மனை யாகி வழங்கும்வல்ல
கோலுக்கு வல்லஅண் ணாமலை யார்கட்கு கோயிலகப்

பாலுக்கு வந்தது கண்டாய்நம் வெங்கைப் பழமலையே
(திருவே. கோ. 121)

''பண்டை யறத்தின் படிவமிது வென்னவுருக்
கொண்ட விலிங்கையன் குலமைந்தன்.......................
கண்ட குலத்திற் கருதின் இரட்டியாம்
பண்ட குலத்தின் பயனுனன் —மண்டலிகர்
நல்லகோ லின்று நவைக்கோ லெனச்செயுங்கோல்
வல்லகோ லண்ண மலைவள்ளல் —மல்லலுறச்
சந்தி பொருத்தித் தகும்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழப் புதவணித்தா —முந்தையோர்
செய்யுள் போற் செய்த திருக்கோயில்''
(திருவே. உலா. 45-65)

என்பனவற்றுல் அதையறிக.

செந்தமிழ் இதழில் புத்தகங்களுக்கு மதிப்புரை வழங்கப்படுவது யாவரும் அறிந்ததே. மதிப்புரை விரும்புவோர் தங்கள் புத்தகங்களில் இரண்டுபிரதிகளை அனுப்பி வைக்கவேண்டும். மதிப்புரை இடப்படும் புத்தகங்கள் தமிழ்ச்சங்கப் ''பாண்டியன் நூலகத்தில்'' சேர்க்கப் பெறும்.

பொறுப்பாசிரியர்.

ஓரங்க நாடகம்:

# நந்தா விளக்கு

தி. வேலவன், திருவனந்தை.

—முகப்பு—

[வேந்தர்வேளிர் வீரர் விலைஞர் பாணர் பாடுநர் ஆடுநர் பாவலர் புலவர் எனப் பலதிறத்தவரைப் பண்டைப் பனுவலுள் காணலாம். அவர் நெஞ்சும் நினைவும் செயலும் அரியவை.

புலவர் போற்றும் வேளிருள் ஒருவன் பாரி. புலவோர் போற்றும் புலவர் கபிலர். இவரிருவர் நட்பும் வாழ்வும் எண்ணி உணரத் தகுவன. பாரியின் நெஞ்சம் அரியது. கபிலரின் நினைவு சீரியது.

வஞ்சனை பாரியை வீழ்த்தியது என்பது பனுவல் கூற்று. ஆயின் வீழ்த்தியவர் எவர் எனப் பனுவல் சாற்றியிலது. வரலாற்றுய்வாளர் பாரியோடு பொருதவர் முடியுடை வேந்தரல்லர் என்றும், பாரியின் செருக்கடக்குதற்கே மன்னர் படைகொண்டு அவன் குடை வென்றனர் என்றும் குறிப்பிடுவர்.

பாரியோ டெதிர்ந்தவர் எவரெனத் தெளிதல் அரிது. பழையன் மாறனும், குட்டுவஞ்சேரலும், நெடுங்கிள்ளியும் பாரியின் காலத்து வாழ்ந்தவர். அவரே பாரியை எதிர்ந்தவராகக் கொண்டுள்ளது இந்நாடகம். புலவோர் அன்று வாழ்ந்தவர், அழும்பில் வேள் அருந்திறல் என்போர், ஈண்டு, நாடகத்திற்காகப் படைக்கப்பட்டுளர்.

பண்டைப் பனுவலின் ஒரு பகுதியின் விளக்கமே இந் நாடகம்.

இன்றைய பிரான்மலை அன்றைய பறம்பு. அது அன்று வளம் பல பெற்று நலமுடன் நின்றது. அதன் தலைவன் வேள் பாரி முடிமன்னர் நாட்டரசின் அச்சு. வேளிரும் குரிசிலரும் அவர்க்குத்

திறையிறுக்கும் உறுப்பரசுகளின் தலைவர்.

வளனும் வலியும் கொண்டவர் உரம்பேசித் திறனில் மன்னரைத் தலைவரென ஏற்க மறுத்தல் இயல்பு. வேளிர் வளனும் சிறப்பும் கண்டு, அவர் சீர் ஓங்குதலைத் தாங்காது முடியுடையோர் கலங்கியதும் உண்டு.

அவ்வழிப் பொருமை எழலும், இகலும் காய்ச்சலும் முகிழ்த்தலும் போர்பூத்தலும். வென்றி காய்த்தலும், கனிந்தவை துய்த்தலும் வழக்கம்.

செழியன் பகை விதைத்தான் செம்பியன் நீர்
தெளித்தான் சேரன் களை பறித்தான்......வளர்ந்தது...
அரும்பியது... அலர்ந்தது. கபிலர் வேலியிட்டார்.
பிஞ்சுவிட்டது. செழியன் அஞ்சினுன். பயன் கொள்ள
மறுத்தான். அதை விரும்பாது சென்ருன். எஞ்சியோர்
பெற்றனர். இது நாடகத்தின் கதை.]

# (1) பொருமை

[முற்பகல். பழையன் மாறன் ஏனுதி அருந்திறலோடு மதுரை அரண்மனையின் அவையரங்கில் உலவிக்கொண்டிருக்கின்றனன். வேல் தாங்கிய காவலன் வாயிலண்டை நிற்கின்ருன்.]

பழையன்மாறன்:- பாரி! பறம்பின்வேள் பாரி! என்னிலும் சிறந்தவனு?

அருந்திறல்:- ஆம் மன்னவ! வண்மையிற் சிறந்தவன் என்பர் நம்நாட்டவரும்.

மாறன்:- நம் நாட்டவரோ ஆங்கன் கூறுவர்!.............. மன்னன் புகழ் பேசாமல் வேளிர் புகழ் பேசுவதெனின்? ஆம்! அதிலும் மெய்யுளது. இன்றேல் கபிலநம் அவனைக் காணச் செல்லுவரோ?...என்னிலும் இசையுடையன்...மெய் !?

(கபிலன் வருகின்றனன்)

கபிலன்:- மன்னவ! வாழ்தி!...என்ன பாரியின் பெயர் இங்கொலிக்கிறது.

(தொடரும்)

சமயம்:

| | | |
|---|---|---|
| 34. | திருவாய்மொழி | பி. ஆர். புருசோத்தம நாயுடு |
| 35. | ,, | ,, |
| 36. | ,, | ,, |
| 37. | ,, | ,, |
| 38. | ,, | ,, |
| 39. | ,, | ,, |
| 40. | கம்ப ராமாயண வசனம் ஆரணியாகாண்டம் | கம்பர் |
| 41. | ,, சுந்தரகாண்டம் | ,, |
| 42. | கிருஷ்ணஎசுர்வேதம் | காசிவாசி சிவானந்தயதீந்திரசாமி |
| 43. | ,, | ,, |
| 44. | ,, | ,, |
| 45. | ,, | ,, |
| 46. | ,, | ,, |
| 47. | ,, | ,, |
| 48. | ,, | ,, |
| 49. | ,, | ,, |
| 50. | ,, | ,, |

| | | |
|---|---|---|
| 51. | ,, | ,, |
| 52. | சாமவேத சங்கிதை | மொ. பெ. சிவானந்த யதீந்திரசாமி |
| 53. | ,, | ,, |
| 54. | ,, | ,, |
| 55. | சாமவேத சங்கிதை | மொ. பெ. சிவானந்த யதீந்திரச்சாமி |
| 56. | திருவருட்பயன் தெரிவுக் கட்டுரை | தே. ஆ. சீனிவாசாச்சாரியன் |
| 57. | ,, | ,, |
| 58. | நிட்டானு பூதி சாரம் | பிரதமகுருமூர்த்திகள் |
| 59. | ,, | ,, |
| 60. | அதர்வவேதம் | எம். ஆர். ஜம்புநாதன் |
| 61 | அதர்வ-வேதம் | ,, |
| 62. | ,, | ,, |
| 63. | மஹாபாரதம் ஆதிபர்வம் | டி. வி. சீனிவாஸாசாரியர் |
| 64. | மஹாபாரதம் சபாபர்வம் | ,, |
| 65. | மஹாபாரதம் வனர்பர்வம் | ,, |
| 66. | மஹாபாரதம் வனர்பர்வம் | ,, |
| 67. | மஹாபாரதம் வனர்பர்வம் | ,, |
| 68. | மஹாபாரதம் விராடபர்வம் | மொ. பெ. அ. வேங்கடேசாசார்யர் |
| 69, | மஹாபாரதம் உத்தியோக பர்வம் | கிருஷ்ணசாஸ்திரி |
| 70. | மஹாபாரதம் துரோண பர்வம் | டி. வி. சீனிவாஸாசாரியார் |

| | | |
|---|---|---|
| 71. | மஹாபாரதம் துரோண பர்வம் | ,, |
| 72. | மஹாபாரதம் கர்ணபர்வம் | ,, |
| 73. | மஹாபாரதம் அநுசாஸனபர்வம் | ,, |
| 74. | ,, | ,, |
| 75. | மஹாபாரதம் சாந்திபர்வம் | பைங்காடு கணபதிசாஸ்திரி |
| 76. | ஸ்வர்க்காரோகனபர்வங்கள் | பல ஸம்ஸ்கிருத பண்டிதர்கள் |
| 77. | ,, | ,, |
| 78. | சிவஞான சித்தியார் சுபக்கம் | அருணந்திசிவாசாரியார் |
| 79. | சிவஞான சித்தியார் சுபக்கம் | அருணந்திசிவாசாரியார் |
| 80. | சிவஞான சித்தியார் சுபக்கம் | அருணந்திசிவாசாரியார் |
| 81. | சிவஞானபோதம் பழைய உரை | மெய்கண்டதேவநாயனார் |
| 82. | சிவஞானபோதம் பாண்டிப்பெருமாள் விருத்தி | மெய்கண்டதேவநாயனார் |
| 83. | சிவஞான முனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும் | கா. சுப்பிரமணிய பிள்ளை |
| 84. | சிவஞான போதமும் பன்னிரு திருமுறையும் | தே. அ. சினிவாசாசாரியன் |
| 85. | சைவசித்தாந்த ஞான போதம் | மறைமலையடிகள் |
| 86. | சிவஞான போத மூலமும் சிவஞான பாஷ்யமும் | மெய்கண்டதேவநாயனார் |
| 87. | சிவஞான போத மூலமும் சிவஞான பாஷ்யமும் | மெய்கண்டதேவநாயனார் |
| 88. | சிவஞான போத சிற்றுரை விளக்கம் | மெய்கண்டதேவநாயனார் |
| 89. | சிவஞான போத சிற்றுரை விளக்கம் | மெய்கண்டதேவநாயனார் |
| 90. | திருத்தொண்டர் பெரிய புராணம் | ஆறுமுகநாவலர் |

| | | |
|---|---|---|
| 91 | சிவஞான போதமும் பொழிப்புரையும் | மெய்கண்ட தேவர் |
| 92. | மீனுட்சி கல்யாணம் | இலக்குமி அம்மாள் |
| 93. | கைவல்யநவநீதம் மூலமும்-உரையும் | தாண்டவமூர்த்தி சுவாமிகள் |
| 94. | சுவயம்பிரகாச விஜயம் | அ. சுப்பிரமணிய பாரதி |
| 95. | பகவற்கீதா மான்மியங்கள் | ப. ஆ நாராயண சுவாமி |
| 96. | பரங்கிரிப் பிரபந்தத் திரட்டும் குறிப்பும் | மு. ரா. அருணசலக் கவிராயர் |
| 97. | அகரவருக்கக் கோவை | வை. பொன்னையா |
| 98. | திருமயிலைத்திரிபந்தாதி | இராமையர் |
| 99. | சங்கரலிங்க உலா | ப. ஆ. உ. வே. சாமிநாதையர் |
| 100. | சுப்பிரமணியதேசிகர் மும்மணிக்கோவை | பரமசிவத்தம்பிரான் |
| 101. | கடம்பவன புராணம் | வீமநாத பண்டிதர் |
| 102. | தேவைத்திரி பந்தாதி | சிங்கயச் செட்டியார் |
| 103. | சென்னிமலை ஆண்டவர் காதல் | சாம்பமூர்த்தி |
| 104. | திருமந்திரம் | திருவாவடுதுறை ஆதீனம் |
| 105. | மங்களாம்பிகை மாலை | வி. சாமிநாத பிள்ளை |
| 106. | ஈசாவாஸ்யோபநிஷத்டீகா | பாலசுப்பிரமணியபிரம்மசுவாமி |
| 107. | முருகவேல் பனுவல் திரட்டு | வி. உலகநாத முதலியார் |
| 108. | மயூரகிரியுலா | சு.மு.இராமசுப்பிரமணியன்செட்டியார் |
| 109. | திருமால் தோத்திரப்பாமாலை | கே. எம். முத்தையா பிள்ளை |
| 110. | உபந்யாஸ மஞ்ஜரி | கோ. வை. சு[illegible]பிரமணி[illegible]ல்திரி |